## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

அசல் வழக்கு எண். 28/2021

நாள் : 14.02.2023

வா.சா.1 திரு. ராமமூர்த்தி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தானது ராக்கப்பன் சேர்வை மற்றும் அவரது உடன்பிறந்தவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று கூறுவதற்கு ஆதாரமாக நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் செய்துள்ளேன். நான் கூறுவது தவறு என்றும் அவ்வாறு ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் அது அவரது சொத்து இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது ராக்கப்பன் சேர்வைக்கு பின்னர் பார்வதியம்மாளுக்கு முழுபாத்தியப்பட்டது என்று கூறுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வதியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று கூறுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் பார்வதியம்மாளுக்கு சொத்து பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. பார்வதியம்மாளுக்கு சொத்து பாத்தியப்படாத காரணத்தினால் அவருக்கு உரிமையில்லாத சொத்தைப் பொறுத்து எனது தந்தையாருக்கு அவரது பாகத்தைப் பொறுத்து விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுக்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் ஒரு அரசு அதிகாரி என்பதால் அவர் பெயருக்கு வந்ததாக கூறப்படும் அசையா சொத்துக்களைப் பொறுத்து அரசுக்கு தெரியப்படுத்தினாரா என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் அப்போது சிறுவனாக இருந்தேன். விடுதலைப்பத்திரம் பதிவு செய்யும்போது முனி என்ற ரமணி எனது தந்தையார் அவர் அரசு ஊழியர் என்று தெரியப்படுத்தினாரா என்று எனக்கு தெரியாது. எனது தந்தை லோன் வாங்கி வீடு கட்டினார் ஆனால் அதற்குரிய ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் தந்தைதான் வீடு கட்டினார் என்று கூறுவதற்கு ஆதாரமாக நான் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.2 ல் சொத்தைப் பற்றி எந்த விபரமும்

காணப்படவில்லை என்றால் சரிதான். 06.12.2017 அன்றுதான் முனி என்ற ரமனி பெயருக்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். பட்டா ஏற்படுவதற்கு முன்னரே வா.சா.ஆ.2 ன் அடிப்படையில் வீட்டுவரி செலுத்தப்பட்டுள்ளது என்றால் எனது தந்தையார் பெயருக்கு ஏற்கனவே பட்டா ஏற்பட்டிருந்தது அதன் அடிப்படையில்தான் வா.சா.ஆ.2 ன் மூலம் வரி செலுத்தப்பட்டுள்ளது. எனது தந்தைக்கு ஏற்கனவே பட்டா ஏற்பட்டுள்ளது என்று காட்டுவதற்கு ஆதாரமாக நான் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது உடன்பிறந்த அண்ணன் தாசில்தாராக வேலை செய்த காரணத்தினால் எனது தந்தை பெயருக்கு பட்டா ஏற்படுவதற்கு முன்னரே வீட்டுவரி கட்டியதாக எனது தந்தை பெயரில் ஆவணம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ–3 ஆவணங்கள் இந்த தாவா சொத்திற்குரிய ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முனி என்ற ரமணிக்கு சொத்துக்கள் பாத்தியப்படாதபோது வாரிசு அடிப்படையில் அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகள் சொத்துக்களை அடைந்ததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனது தந்தை பெயரில் மின் கட்டணம் செலுத்தியதற்கு உண்டான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தை பெயரில் சொத்துக்கள் பாத்தியம் இல்லாதபோது அவருக்கு பின் நாங்கள் அடைந்து வா.சா.ஆ.9 கூட்டுப்பட்டா ஏற்பட்டதாக கூறுவது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ராதிகா தையலகம் என்ற பெயரில் கடை நடத்துவது சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து 20 வருடங்களாக குடியிருந்து ராதிகா தையலகம் நடத்தி வருகிறார்கள். ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று கூறுவதற்கு ஆதராவாக புகார் எதுவும் அளிக்கவில்லை சட்டநடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பிரதிவாதிகள் தாவா சொத்து அவர்களுடையது என்ற உரிமையில் குடியிருந்து தொழில் செய்து வருகிறார்கள் என்றும் அவர்கள் எந்த காலத்திலும் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் முதல்தளத்தில் ரூ.10 லட்சம் செலவு செய்து 2 வீடுகளை நானும் ரவீந்திரனும் கட்டி அனுபவித்து வருகிறோம் என்று கூறுவதற்கு ஆதாரமாக அரசாங்கத்திற்கு முறைப்படி நாங்கள் இருவரும் அரசு ஊழியர்கள் என்ற அடிப்படையில் தகவல் தெரிவிக்கவில்லை என்று

சொன்னால் சொத்து எனது தந்தை பெயரில் இருந்ததால் நாங்கள் தெரிவிக்கவில்லை. நான் கூறுவது தவறு என்றும் 1973 ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர்கள் நடத்தை விதிகள் சட்டம் பிரிவு 7 உட்பிரிவு 1 பி– ன்கீழ் தவறு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து தொழிலும் செய்து வருவதால் காலவரையறை சட்டத்தின்கீழ் அந்த சொத்தில் பாகம் கேட்க எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தில் முதல்தளத்தில் நாங்கள் கட்டிய வீட்டில் குடியிருந்து அனுபவம் செய்தபோது வீண் சண்டை சச்சரவுகள் செய்தார்கள் என்று கூறுவதற்கு ஆதரமாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காரணம் எனது அண்ணன் குடும்பம் என்பதாலும் என் அண்ணன் காலமாகிவிட்டார் என்பதாலும் குடும்பத்தார் மீது நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. நான் கூறுவது தவறு என்றும் அவ்வாறு அவர்கள் எந்த பிரச்சனையும் செய்ததில்லை என்றும் செய்யாத காரணத்தினால்தான் நான் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான ஒரு தகவலை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சொந்த வீட்டை விட்டு வாடகைக்கு குடியிருந்து வருகிறோம் என்று கூறுவதற்கு ஆதாரமாக நான் நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து முழுமையும் பிரதிவாதிகளுக்குத்தான் பாத்தியம் என்றும் அந்த சொத்தில் நானோ எனது சகோதரரோ வீடுகள் எதுவும் கட்டவில்லை என்றும் வழக்கிற்காக வீடு கட்டியுள்ளதாக தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பார்வதியம்மாளுக்கு தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டது அல்ல என்பதால் வாரிசு அடிப்படையில் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை கேட்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் நீதிமன்றக்கட்டணமும் தவறாக செலுத்தியுள்ளேன் என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.14 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாதது என்றால் சரியல்ல. பாகம் கேட்டு பஞ்சாயத்து பேசியது சம்பந்தமாக எவ்வித சாட்சியங்களும் ஆவணங்களும் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதனால் பஞ்சாயத்தே பேசப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாகம்

கேட்டு நான் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அதனால் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ரகுநாதன் பெயரில் ஏற்பட்ட உயிலின் அடிப்படையில் அவரது வாரிசுகளுக்குத்தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றும் வாதிகளாகிய எங்களுக்கு பாகம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் வாதிகளாகிய எங்களுக்கோ 5ம் பிரதிவாதிக்கோ எவ்வித பாத்தியமும் இல்லை என்றும் நான் குறியீடு செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டு தாவா சொத்தை அடைய வேண்டும் என்ற நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம்/ஜி. விஜயா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்